பக்கங்கள்:-14

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 22 | சனிக்கிழமை | 07.12.2024 | அதிர்வு 127

## வவுனியாவில் ஆற்றில் மூழ்கி குடும்பஸ்தர் பலி!

(வவுனியா நிருபர்)

வவுனியா, பேராறு நீர்த்தேக்கத்தின் வான்பகுதியில் மீன்பிடித்துக் 06

# ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாகச் சேர்க்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை

## சிறீதரன் எம்.பியின் விசேட கூற்றுக்கு அரசு பதில்



முகவர்களினால் ஏமாற்றப்பட்ட நிலையில் ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சின் மூலம் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க உறுதியளித்தார்.

நாடாளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் அசோக ரன்வல தலைமையில் கூடிய நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் முன்வத்த விசேட கூற்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

சிறீதரன் எம்.பி விசேட கூற்றை முன்வைக்கையில்,

“இலங்கையில் இருந்து முகவர்கள் ஊடாக வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்ட வடக்கு மாகாணத்தைச் 06

# இடைக்காலக் கணக்கறிக்கை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

## அதிரடி காட்டும் அநுர அரசு

**2025ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான அநுர அரசின் இடைக்காலக் கணக்கறிக்கை நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.**

**2025ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான அரசின் பணிகள் மற்றும் கடன் சேவைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான இடைக்காலக் கணக்கறிக்கை கடந்த 3ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.** 06



## பிணையில் வந்த லொஹான் ரத்வத்தே நேற்று மீண்டும் கைது



பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே மீண்டும் கைது 05

### இலங்கையில் மிக மோசமான மனித உரிமை மீறல்கள்:

## குற்றவாளிகளுக்கு எதிராக பயணத் தடையை விதிக்குக!

### சர்வதேசத்திடம் யஸ்மின் சூகா வலியுறுத்து



இலங்கையில் மனித குலத்துக்கு எதிரான மிக மோசமான மீறல் குற்றங்களிலும், ஊழல் மோசடிகளிலும் ஈடுபட்ட அரச மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு எதிராகத் தடைகளையும், நுழைவு அனுமதித் தடையையும் விதிக்குமாறு வலியுறுத்தி அதனுடன் தொடர்புடைய 60 இற்கும் மேற்பட்ட கோரிக்கைகளையும், ஆவணங்களையும் 06




எம்.பி. பதவியை இழந்தமைக்காக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஓய்ந்து விடவில்லை. தொடர்ந்தும் சுறுசுறுப்பாக யாழ்ப்பாணத்தில் மக்கள் சந்திப்பு, கூட்டங்கள், வழக்குகள், கொழும்பில் பொது விடயங்கள், வழக்கு விசாரணைகள், கலந்தாலோசனைகள் என்று ஓடித் திரிகின்றார்.

புதிய அரசும், புதிய ஜனாதிபதியும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்துள்ள பின்புலத்தில் வரும் பத்தாம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம் வருகின்றது. இதனை ஒட்டி இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரத்தை ஆராய்வதற்காக ‘எல்லோருக்கும் நீதி’ என்ற தமது அமைப்பின் ஊடாக, முக்கிய பிரமுகர்கள் பங்குபற்றும் கலந்துரையாடல் களம் ஒன்றை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தின் கலந்துரையாடல் அரங்கு ஒன்றில் அன்று மாலை 5 மணிக்கு அவர் நடத்துகின்றார்.

‘நீதிக்கான ஐக்கியம்: மனித உரிமைகள் தினத்தையொட்டி எதிர்காலத்தை 05

### சர்வதேச பிணைமுறியாளர்களுடன்

# கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை முடிந்தால் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பியுங்கள்

## அரசுக்கு ஹர்ஷ டி சில்வா சவால்

“சர்வதேச பிணைமுறியாளர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதால் இனி எதுவும் செய்ய முடியாது என்று அரச தரப்பின் உறுப்பினர்கள் கூறுகின்றனர், அவ்வாறு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. முடிந்தால் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பியுங்கள்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா சவால் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அரசின் இடைக்காலக் கணக்கறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், மேலும் உரையாற்றுகையில்,

“சர்வதேச நாணய நிதியத்தின் செயற்றிட்ட முன்மொழிவுகளுக்கு அமைய 2025 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடனத்தில் “சர்வதேச நாணய நிதியத்தின் செயற்றிட்டத்தில் இருந்து விலகினால் பாரதூரமான நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் “ எனக் குறிப்பிட்டுள்ளார். இதுவே உண்மை. இதனையே நாங்களும் ஆரம்பத்தில் இருந்து கூறினோம்.

சர்வதேச நாணய நிதியத்தைத் தவிர்த்து செயற்பட முடியாது. ஆனாலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருசில நிபந்தனைகள் மீள்பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தினோம். ஆனால், தேசிய மக்கள் சக்தி தேர்தல் மேடைகளில் ஒன்றைக் கூறி விட்டு தற்போது நாடாளுமன்றத்துக்கு இன்னொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

2025 ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலக் கணக்கறிக்கையில் கடன் சேவை 4 ஆயிரம் பில்லியனாக எதிர்பார்க்கப்படுவதுடன், குறித்த 4 மாத காலப்பகுதிகளுக்கு 1600



பில்லியன் ரூபா அரச வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் 2025 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக 4 ஆயிரத்து 800 பில்லியன் ரூபா அரச வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச பிணைமுறியாளர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆகவே, இனி எதுவும் செய்ய முடியாது என்று அரச தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவதை அவதானிக்க முடிகின்றது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. முடிந்தால் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பியுங்கள் என்று சவால் விடுக்கிறேன்.

சர்வதேச பிணைமுறிகளில் இருந்து பெற்றுக்கெண்ட 12.5 பில்லியன் டொலர் கடன்களில் பெருமளவானவை மோசடி செய்யப்பட்டன . ஆகவே, ஆட்சிக்கு வந்தவுடன் கடன்களைச் செலுத்த முடியாது என்று சர்வதேச பிணைமுறியாளர்களிடம் குறிப்பிடுவோம் என்று தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் குறிப்பிட்டது.

அரசு மக்களை ஏமாற்றியுள்ளது. தாங்கள் ஏமாற்றப்பட்டதை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.” – என்றார்.

## கோபா குழுவின் தலைமைப் பதவி எதிரணிக்கு!

# நாடாளுமன்றில் அரசு உறுதி



“கடந்த அரசின் நடவடிக்கைகளை விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்பதனால் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவின் தலைமைப் பதவி அரசுக்குத் தேவை. அதேநேரம் அரச கணக்குக் குழுவின் (கோபா) தலைமைப் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்படும்.”

– இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையின்போதே இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

“நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் கேட்டாலும் தற்போதுள்ள எண்ணிக்கையில் ஒரு உறுப்பினரை மட்டும் அதிகரிப்பதற்கு இணங்குகின்றோம்.” – என்றார்.

“எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி 12 கட்சிகள் இருப்பதால் நாடாளுமன்ற அலுவல்கள் குழுவில் பிரதிநிதித்துவப்படுத்த எதிர்க்கட்சிகளில் 6 பேருக்கே இடமளிக்கப்பட்டிருக்கின்றது. அதில் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சி பிரதம கொறடா ஆகியோர் உத்தியோகபூர்வமாக இடம்பெறுகின்றனர். எஞ்சிய 4 பேரையும் நியமிப்பதிலேயே பிரச்சினை இருக்கின்றது.” – என்று எதிர்க்கட்சி பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க இதன்பாது சுட்டிக்காட்டினார்.

இதற்குச் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க பதிலளிக்கையில்,

“அனைத்து கட்சிகளையும் நாடாளுமன்ற அலுவல்கள் குழுவில் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. அதனால் நாடாளுமன்றத்தில் இருக்கும் ஏனைய முக்கியமான குழுக்களில் அவர்களின் பிரதிநிதித்துவத்துக்கு இடமளிக்க முடியும்.

அந்தவகையில் அரச கணக்குக் குழுவின் (கோபா) தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்குவதற்கு நாங்கள் தீர்மானித்திருக்கின்றோம். அது நீங்கள் கேட்டு நாங்கள் வழங்கவில்லை. அதனை நாங்கள் நியாயமான முறையிலே எதிர்க்கட்சிக்கு வழங்குவதற்குத் தீர்மானித்திருக்கின்றோம். அந்தக் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளோம்.

அதேநேரம் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவின் தலைமைப் பதவி அரசுக்குத் தேவை. ஏனெனில் கடந்த அரசின் நடவடிக்கைகளை விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்பதனால் அதன் தலைமைப் பதவி எமக்குத் தேவை. அதன் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுக்களுக்கு ஏனைய உறுப்பினர்களை நியமிக்க முடியும்.” – என்றார்.

# அரசியல் தீர்வு விடயத்தில் நல்லெண்ணத்துடன் அநுர

## கன்னியுரையில் சத்தியலிங்கம் எம்.பி. புகழாரம்



(கி.வசந்தன்)

இரண்டு தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்தபோது அரசியல் தீர்வு விடயத்தில் தனது நேர்மையான நல்லெண்ணத்தை வெளிக்காட்டினார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் தனது கன்னி உரையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நாங்கள் எதிர்க்கட்சி என்ற பெயருடன் அமர்ந்துள்ளோம். ஆனாலும் அரசு முன்னெடுக்கும் அனைத்து முற்போக்கான செயற்பாடுகளுக்கும் நாம் உங்களுடன் இருப்போம்.

சிறுபராயத்தில் இருந்தே ஆட்சியாளர்களுக்கு எதிரான மனநிலையுடன் வளர்ந்தவர்கள் நாங்கள். எனது தந்தை ஒரு பொதுநலவாதி. தனது வாழ்க்கை முழுவதும் தூய்மையான கம்யூனிசவாதியாக வாழ்ந்தவர். நான் அவரின் வளர்ப்பில் வந்ததால் இன, மத, குல வேறுபாடு எனக்கில்லை. ஆனால், இந்த நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையானவர்கள் அனைத்து விதத்திலும் இந்த நாட்டின் ஏனைய மக்களுடன் சமனாக நடத்தைப்படவில்லை என்ற எண்ணத்துடன் வளர்ந்தவர்கள் நாங்கள்.

அதனாலோ என்னவோ எமது நாட்டின் தேசிய கீதத்தையும் தேசியக் கொடியையும் நாங்கள் மனதார விரும்பவில்லை. ஆனால், மதிப்பளிக்கின்றோம். இந்த மனநிலை எனக்கு மட்டுமல்ல எனது வயதையொட்டிய இன்னும் பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு உள்ளது.

ஆனால், அதை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலை ஏற்பட்டதையிட்டு பல சந்தர்ப்பங்களில் நான் மனவேதனை அடைந்துள்ளேன். நான் விரும்பும் தேசிய கீதத்தையும் நான் விரும்பும் தேசியக் கொடியையும் எனது வாழ்க்கைக் காலத்துக்குள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு இந்த அரசினுடையது.

நான் சொல்ல விளையும் விடயத்தை நீங்கள் அனைவரும் புரிந்திருப்பீர்கள் என எண்ணுகின்றேன். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தனது உரையில் சமாதானம் ஒவ்வோர் மனதிலும் இருந்து தொடங்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

உண்மை, ஆனால் அதை எங்கிருந்து தொடங்கலாம் என்று சிந்தித்தால் அது உங்கள் பக்கத்திலிருந்துதான் தொடங்க வேண்டும் என நான் நினைக்கின்றேன்.

போரால் இறந்த உறவுகளை வணங்கும் நினைவேந்தலுக்கு நீங்கள் தடை போடவில்லை. அது உங்கள் நல்லெண்ணத்தைக் காட்டுகின்றது. அதேநேரம் பல நூற்றுக்கணக்கான இறந்தவர்களின் உடல் புதைக்கப்பட்ட துயிலும் இல்லத்தில் இன்று இராணுவ முகாம் உள்ளது. இந்த இடத்தை விடுவிக்க நடவடிக்கை எடுத்து நல்லெண்ணத்தைக் காட்டுங்கள்.

அரசியல் கைதிகளை விரைவில் விடுதலை செய்யுங்கள். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதற்கு மனசாட்சியுடன் விடையைத் தேடுங்கள். அதனூடாக உங்கள் நல்லெண்ணத்தைக் காட்டுங்கள். மகாவலி – எல் வலயத்தில் மூவின மக்களுக்கும் காணிகளைப் பகிர்ந்தளியுங்கள்.

ஜனாதிபதி தலைமையில் வரும் அரசு நாட்டில் காணப்படும் இரு முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் என்ற நம்பிக்கையில்தான் இருக்கின்றோம்.

முதலாவதாக இந்த நாட்டில் காணப்படும் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு. இரண்டாவதாக பொருளாதாரப் பிரச்சி னைக்கான தீர்வு. முதலாவது பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இரண்டாவதற்கு முழுமையான தீர்வொன்றைக் காணமுடியாது.

ஜனாதிபதி தனது உரையில் அரசியல் தீர்வு தொடர்பாகப் பேசவில்லை என எமது உறுப்பினர்கள் சொன்னாலும் இரு தினங்களுக்கு முன்னர் அவரைச் சந்தித்தபோது அரசியல் தீர்வு விடயத்தில் தனது நேர்மையான நல்லெண்ணத்தை வெளிக்காட்டினார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக் காலத்தில் புதிய அரசியல் யாப்பின் வரைபு தயாரிக்கப்பட்ட போது வழிநடத்தல் குழுவில் இருந்து மக்கள் விடுதலை முன்னணி தனது பங்களிப்பை வழங்கியிருந்தனர். அந்த முயற்சி தொடர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுடன் சேர்ந்து முன் செல்ல நாங்கள் தயாராகவே உள்ளோம். பொருளாதாரப் பிரச்சினை ஏற்படக் காரணம் இடம்பெற்ற யுத்தம், நாட்டின் வளங்களையும் இந்த நாட்டுக்கு உள்ள சந்தர்ப்பங்களையும் பிரதிபலிக்கும் பொருளாதாரக் கொள்கை இன்மை.

ஆட்சியாளர்களினதும் சக பாடிகளினதும் ஊழல், துஷ்பிரயோகம், வீண்விரயம் போர் முடிவுக்கு வந்து 15 வருடங்களாகி விட்டன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மொத்தத் தேசிய வருமானத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பங்களிப்பு எவ்வளவு? இன்று எமது மக்களின் பொருளாதாரம் மிக நலிவடைந்துள்ளது. 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள், 75 ஆயிரம் விசேட தேவைகள் உள்ள மக்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், பெற்றோரை இழந்த குழந்தைகள், குழந்தைகளை இழந்த பெற்றோர்கள் எனச் சமூகத்தில் மூன்றில் ஒரு பகுதியினர் ஏனையவர்களின் உதவியின்றி சுயமாக எழுந்து நிற்க முடியாதவர்கள்.

எனவே, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விசேட பொருளாதார மீட்சித் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது. அதற்கான முயற்சியில் உங்களுக்குக் கை கொடுக்க நாங்கள் உள்ளோம்.

தொடர்ந்தும் நிவாரணத்தை நம்பி வாழும் மற்றவர்களில் தங்கி வாழும் சமூகத்தை உருவாக்கதீர்கள். அரசாலும் சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்வாதாரத் திட்டங்களை ஆராய்ந்து பாருங்கள். அவற்றில் வெற்றியடைந்த திட்டங்கள் எத்தனை? தமது சொந்த உழைப்பில் வாழும் சமூகத்தைக் கட்டியெழுப்பப் பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டுங்கள்.

பாழடைந்த குளங்களை புனருத்தாரணம் செய்து விவசாயக் காணியற்ற குடும்பங்களுக்குக் குறைந்தது 2 ஏக்கர் வயல் காணிகளை வழங்குங்கள். இவ்வாறான திட்டங்கள் வெற்றியடைய நாமும் உங்களுடன் சேர்ந்து உழைக்க ஆயத்தமாக உள்ளோம்.

சர்வதேச சட்டத்துக்கு முரணாக ஆட்கடத்தல்காரர்களால் வடக்கு இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களை விடுவித்து தருமாறும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அவர்களது உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன் அண்மையில் ஏற்பட்ட அனர்த்தம் தொடர்பிலும் சில வார்த்தைகள் சொல்ல எண்ணுகின்றேன். திட்டமிடப்படாத கட்டுமானங்களும், வடிகால் அமைப்பு சீரின்மையும் அனுமதியற்ற கட்டட நிர்மானங்களும் வெள்ளம் ஏற்பட முக்கிய காரணங்களாகும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்பதையும் இங்கும் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டுள்ளேன்.

இறுதியாக நாங்கள் இந்த நாட்டின் பூர்வக்குடியாக, ஒரு தேசிய இனமாக எங்களின் அடையாளங்களை பேணிக் கொண்டு ஒரு பன்முகத்தன்மை உள்ள வளமான நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றுபடுவோம்." – என்றார்.

# நாணய நிதிய இணக்கப்பாடுகளை மீளத் திருத்தியமைக்க முடியாது!

## அநுர அரசு திட்டவட்டம்

"சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போது ஏற்படுத்திக் கொண்டுள்ள இணக்கப்பாடுகளை மீண்டும் திருத்தியமைக்க முடியாது. அதில் காலதாமதங்களை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தைச் சவாலுக்கு உட்படுத்த முடியாது."

– இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இடைக்கால கணக்கறிக்கை மீது நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமக்குப் பாரிய பொறுப்பொன்று சுமத்தப்பட்டுள்ளது. அதனை முழுமையாகப் பின்பற்ற அனைவரும் பிணைக்கப்பட்டுள்ளோம்.

நாங்கள் நீண்டகாலத் திட்டங்களைச் செயற்படுத்தவுள்ளோம். அதற்காக ஒரு சிறந்த பொறிமுறையைக் கையாள வேண்டும்.

அதற்காகத்தான் நாடாளுமன்றத்தில் குறுகிய கால தீர்மானங்கள் சில எடுக்கப்படுகின்றன. அதன் ஒரு கட்டமாகத்தான் இடைக்காலக் கணக்கறிக்கையொன்றை முன்வைத்துள்ளோம். இதில் நீண்டகால இலக்குகள் இல்லை.

இடைக்காலக் கணக்கறிக்கையில் நீண்ட காலப் பொருளாதாரத் திட்டங்களை முன்வைக்க முடியாது. என்றாலும், வரவு – செலவுத் திட்டத்தில் நீண்ட கால இலக்குகள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு முன்னோக்கிச் செல்வோம்.

நீண்ட காலத் திட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டமும் ஒன்று. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அந்தத் திட்டத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அதனை நிறுத்த முடியாது.

அவ்வாறு செய்தால் நாடு பின்னோக்கிச் செல்லும். அதனால் இந்தத் திட்டத்தில் உள்ள குறைப்பாடுகளை நீக்கி




பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்யவே எதிர்பார்க்கின்றோம்.

நீண்ட காலப் பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நகர உற்பத்தி பொருளாதாரம் அதிகரிக்க வேண்டும். அந்த இலக்கை நோக்கித்தான் நாம் பயணிக்கின்றோம்.

12ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன்னர் மீண்டும் இதில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளுமாறு எதிர்க்கட்சி கோருகின்றது. அதற்குக் கால அவகாசம் போதுமானதாக இல்லை. அவ்வாறு செய்யவும் முடியாது.

ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடுகளின் பிரகாரம் கடன் மறுசீரமைப்புப் பணிகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும். அடுத்த வருடம் வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அதில் எமக்கு சில இலக்குகள் உள்ளன. அதனால் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து இழுத்தடிப்பு செய்ய முடியாது." – என்றார்.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நோக்குதல்' என்ற தலைப்பிலான இந்தக் கலந்துரையாடல் அரங்குக்கு அரசுப் பிரதிநிதிகள் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது. கலந்துரையாடலில் தற்போதைய அரசியல் நிலைவரப் பின்புலத்தில் மனித உரிமைகள் விவகாரம் பற்றிய விடயங்கள் வெளிவரும் என எதிர்பார்க்கலாம்.

+ + +

தற்போதைய அரசியல் நிலைவரங்களை ஆராய்வதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை வவுனியாவில் கூடுகிறது.

இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள், அழைப்புகள், நிகழ்ச்சி நிரல் தயாரிப்பு ஆகியவற்றை முறைப்படி செய்வதன் மூலம் தமது நிர்வாகத்தில் இனியாவது தமிழரசுக் கட்சி உருப்படும் என்பதை கட்சியின் பொதுச் செயலாளரும் புதிய எம்.பியுமான மருத்துவர் சத்தியலிங்கம் நிரூபிக்க முயல வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

ஒரு பதவிக்கான ராஜினாமாக் கடிதத்தை உரிய நடவடிக்கைக்காக ஏற்றுக் கொண்டு விட்டார் எனத் தாம் உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டு, பின்னர் தொடர்ந்தும் சம்பந்தப்பட்ட நபர் அந்தப் பதவியில் தொடர்கின்றார் என்று கருத்தில் முன்னுக்குப் பின் முரணாக நிர்வாகம் நடத்துவது அற்பத்தனமான வேலை என்பதை அவருக்கு இச்சமயத்தில் நினைவூட்டுவது பொருத்தமானது என நினைக்கிறேன்.

+ + +

நேற்று இரவு பிந்திக் கிடைத்த செய்தி ஒன்றை வாசகர்களுடன் பரிமாற விரும்புகிறேன்.

இடையில் கட்சியின் ஒரே ஒரு தேசிய மாநாட்டை மட்டும் நடத்தியமை மூலம் கடந்த 11 வருடங்களாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக நீடிக்கும் மாவை சேனாதிராஜாவின் பதவியாசை இன்னும் தொடர்வதாகவே தெரிகிறது.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் வேட்பாளர் நியமன விடயத்தில் தமது விருப்பங்கள் நிறைவேறாமையை வைத்து கட்சித் தலைவர் பதவி மற்றும் ஏனைய பொறுப்புகளில் இருந்து தாம் உடனடியாக விலகுகின்றார் என எழுத்து மூலம் அறிவித்து, அதனை பரபரப்பாகப் பகிரங்கப்படுத்தினார் மாவையர்.

அந்த ராஜினாமாக் கடிதம் தொடர்பில் விளக்கம், விவரம் கேட்டு கட்சியின் பொதுச் செயலாளர் பதிவுத்தபாலில் முதல் கடிதம் ஒன்றை மாவையருக்கு அனுப்பி இருந்தார். மாவையிடம் இருந்து பதில் ஏதும் வரவே இல்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த கட்சியின் பொதுச் செயலாளர், மாவையின் ராஜினாமாக் கடிதம் உரிய நடவடிக்கைகளுக்காக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என்று தெரிவித்து மீண்டும் பதிவுத் தபாலில் கடிதம் அனுப்பினார்.

அந்தக் கடிதம் அனுப்பிய பின்னர், ஓரிரு தினங்கள் கழித்து, பழைய திகதி போட்டு தமது முன்னைய ராஜினாமாக் கடிதத்தைத் தாம் மீளக் கை வாங்குகின்றார் என்று தெரிவிக்கும் ஒரு கடிதத்தை பொதுச்செயலாளரிடம் ஓர் ஆள் மூலம் சேர்ப்பித்திருக்கின்றார் மாவையர் என்று தகவல் கிடைத்துள்ளது.

கிடைக்கும் கடைசி வாய்ப்பு வரை கட்சித் தலைவராக தொடர்ந்து இருந்து, கட்சியை உண்டு, இல்லை என்று பண்ணிவிட்டுத் தான் அவர் ஓய்வார் போல தோன்றுகின்றது.

எனினும், கட்சியின் முடிவை மீறி, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற பெயரில் நிறுத்தப்பட்ட அரியநேத்திரனை ஆதரித்துப் பிரசாரம் செய்த விவகாரம் தொடர்பாக விளக்கம் கோரி அவருக்கு (மாவையருக்கு) அனுப்பப்பட்ட கடிதத்துக்கு அவர் இன்னமும் பதில் அனுப்பவில்லை என்று தெரிகின்றது.

எது,எப்படியாயினும் ஒரு கட்சியின் தலைவரே அந்தக் கட்சிக்கு விரோதமான நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காக ஒழுக்காற்று விசாரணையை எதிர் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படும் கடைநிலை வரை சென்ற பின்பும் அந்தப் பதவியில் தொடர முயற்சிப்பது - ஒட்டிக்கொண்டிருப்பது - என்பது பெரும் அபத்தமாகும்.

---

## பிணையில் வந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
செய்யப்பட்டுள்ளார்.

குடிபோதையில் வாகனம் ஓட்டியதால் ஏற்பட்ட விபத்து ஒன்று தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வைத்து நேற்று அவர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

லொஹான் ரத்வத்தேயின் மனைவிக்குச் சொந்தமான மிரிஹானை எபுல்தெனிய சாலாவ வீதியிலுள்ள 3 மாடி வீட்டில் இருந்து இலக்கத் தகடுகள் அற்ற சொகுசுக் கார் சட்டவிரோதமான முறையில் பொருத்தப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் லொஹான் ரத்வத்தேயும், அவரது மனைவியும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

NORTH BEAT
The North's pulse, in Every Beat
வடக்கின் செய்திகளை ஆங்கிலத்தில் உடனுக்குடன் தரும் ஒரேயொரு இணையத்தளம்
www.northbeat.lk

## குற்றவாளிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் அரசுகளுக்கும், ஐ.நா. சபைக்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் அனுப்பி வைத்திருக்கின்றது.

ஜொஹனஸ்பேர்க்கை தளமாகக் கொண்டு யஸ்மின் சூக்கா தலைமையில் இயங்கி வரும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டமானது இலங்கையின் அரச மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு எதிரான தடைகள் மற்றும் விஸா அனுமதி தடைகள் தொடர்பான 60 இற்கும் மேற்பட்ட கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருப்பதுடன் உலகளாவிய சட்ட வரம்பெல்லையின் பிரகாரம் வழக்குப் பதிவுகளையும் கோரியிருக்கின்றது.

மனித உரிமைகள் தினத்தையொட்டி (எதிர்வரும் 10ஆம் திகதி) தயாரிக்கப்பட்டிருக்கும் இக்கோரிக்கைகள் மற்றும் ஆவணங்கள் அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் அரசுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ், புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், நீதிபதிகள், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினருடன் தொடர்புடைய கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் குறிப்பிடத்தக்க ஊழல், மோசடிகள் என்பன பற்றியவையாக இருக்கின்றன.

உள்நாட்டுப் போரின்போதும், அதற்குப் பின்னருமான காலப்பகுதியில் இடம்பெற்ற சட்டவிரோத படுகொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள், பலவந்தமான கைதுகள் மற்றும் தடுத்து வைப்புக்கள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட மனித குலத்துக்கு எதிரான மிக மோசமான மனித உரிமை மீறல்களும், நாட்டின் அரச கட்டமைப்புக்களில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பாரிய ஊழல்களும் இந்தக் குற்றங்களில் அடங்குகின்றன.

அதுமாத்திரமன்றி இந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் தடைகளை ஏற்படுத்தும் வகையிலான முறையற்ற தலையீடுகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் என்பனவும் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா,

"கடந்த கால மீறல்கள் தொடர்பில் இற்றைவரை பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாத நிலையில், கடந்த கால மற்றும் சமகால குற்றங்களை ஆவணப்படுத்தி, அவற்றுக்கான சான்றுகளைப் பகுப்பாய்வு செய்து, உண்மையைக் கண்டறிவதற்கு ஏதுவான சகல வழிமுறைகளையும் உரியவாறு பயன்படுத்திக்கொள்வது இன்றியமையாததாகும்.

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இலங்கை அதிகாரிகளுக்கு எதிராகப் பிரிட்டனின் தற்போதைய புதிய அரசு எதிர்வரும் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று தடைகளை விதிக்கும் என எதிர்பார்க்கின்றோம்." – என்று தெரிவித்துள்ளார்.

## ரஷ்ய இராணுவத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த இளைஞர்கள் ஐவர் ரஷ்யாவின் இராணுவத்தில் பலவந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

இவர்கள் முகவர்களினால் ஏமாற்றப்பட்ட நிலையில் ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டனர் என்று அவர்களின் படங்களையும் அவர்கள் அனுப்பியுள்ளனர்.

தயவு செய்து இவர்களை இந்த நாட்டுக்கு மீண்டும் அழைப்பதற்கான ஒரு வழிமுறையை மேற்கொள்ளுமாறு உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்." – என்று கூறியதுடன் ரஷ்ய இராணுவச் சீருடையில் அவர்கள் இருக்கும் படங்களையும் சிறீதரன் எம்.பி. சபைக்குச் சமர்ப்பித்தார்.

இதற்குச் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க பதிலளிக்கும்போது, "இந்த விடயம் எமக்கு ஏற்கனவே தெரியப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது நீங்களும் இதனை முன்வைத்துள்ளீர்கள். நாம் இந்த விடயத்தை வெளிவிவகார அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கைகளை எடுப்போம்." – என்றார்.

# மகாவலி கங்கையில் இளைஞரின் சடலம்!

கண்டி, கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகாவலி கங்கையில் இருந்து இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி, வத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய இளைஞரே நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காகக் கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இடைக்காலக் கணக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கமைய, நேற்றுமுன்தினமும் நேற்றும் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை விவாதம் நடைபெற்றது. நேற்றும் விவாதம் முடிவடைந்ததும் குறித்த தீர்மானம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

விவாத முடிவில் எதிர்க்கட்சிகள் இடைக்காலக் கணக்கறிக்கை மீது வாக்கெடுப்பைக் கோராத காரணத்தால் அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்று சபாநாயகர் அசோக ரன்வல சபைக்கு அறிவித்தார்.

அதன் பிரகாரம் அநுர அரசின் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையான 4 மாத காலப் பகுதிக்கான இடைக்காலக் கணக்கறிக்கைக்கு நாடாமன்றத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றது.

இடைக்காலக் கணக்கறிக்கை தொடர்பான விவாதத்தில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு தமது கருத்துகளை வெளியிட்ட போதிலும் வாக்கெடுப்பு இடம்பெற்ற தருணத்தில் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவைத் தவிர ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எவரும் சபையில் இருக்கவில்லை. எதிர்க்கட்சியின் பெரும்பாலான ஆசனங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

ஒரு சில புதிய எம்.பிக்கள் மாத்திரமே எதிர்க்கட்சிப் பக்கத்தில் அமர்ந்திருந்தனர். இலங்கைத் தமிழரசுக் கட்சி இடைக்காலக் கணக்கறிக்கையை எதிர்க்கப் போவதில்லை என ஏற்கனவே அறிவித்திருந்தது. ஆனால், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகள் எவ்வித அறிவிப்பையும் வெளியிட்டிருக்கவில்லை.

புதிய ஜனநாயக முன்னணியின் உறுப்பினர்களும் இடைக்கால கணக்கறிக்கை நிறைவேற்றப்படும் தருணத்தில் சபையில் இருக்கவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

நேற்று மாலை பேராறு நீர்த்தேக்கத்தின் வான்பகுதியில் நபர் ஒருவர் மீன்பிடித்துக்கொண்டிருந்த நிலையில் நீருக்குள் தவறி வீழ்ந்து மூழ்கியுள்ளார்.

இதனை அவதானித்த மற்றொரு நபர் சம்பவம் தொடர்பாக ஊர் மக்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

இதனையடுத்து மேற்படி நபரைத் தேடும் பணி ஊர்மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

நீண்டநேரமாகத் தேடுதல் இடம்பெற்று வந்த நிலையில் சிலமணி நேரங்களின் பின்னர் அவரது சடலம் நீருக்குள் இருந்து மீட்கப்பட்டது.

சம்பவத்தில் தரணிக்குளம் பகுதியைச் சேர்ந்த குரு என்ற இரு பிள்ளைகளின் தந்தையே மரணமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# தைக்கப்பட்ட சீருடைகளை வழங்க அரசாங்கம் எதிர்பார்ப்பு

அடுத்த வருடம் முதல் பாடசாலை மாணவர்களுக்குத் தைக்கப்பட்ட சீருடைகளை வழங்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில்முனைவு அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை சீருடைக்கான துணி களை வழங்கும்போது அதில் பெருமள விலான துணிகள் வீணடிக்கப்படு வதனால் குறித்த தீர்மானத்தை மேற் கொள்ளவுள்ளதாக அமைச்சர் தெரி வித்துள்ளார்.





# கூரிய ஆயுதங்களை வைத்திருந்த இருவருக்கு விளக்கமறியல்

வீதியால் சென்ற பெண்களை அச்சுறுத்தும் விதமாகவும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய கூரிய ஆயுதங்களை வைத்திருந்தமை தொடர்பான இருவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருசாந் தன் பொன்னுத்துரை நேற்று வெள்ளிக் கிழமை உத்தரவிட்டார்.

பருத்தித்துறை கோரியடிப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை வீதியால் சென்ற பெண்கள் யுவதிகளை அச்சுறுத்தும் விதமாக கோஷ்டி ஒன்று ஈடுபட்டிருந்தது.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய அங்கு சென்ற பொலிஸார் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களை வைத்திருந்த இதுவரை கைது செய்து அவர்களுக்கு எதிராக ஆபத்து ஏற்படுத்தும் ஆயுதம் வைத் திருந்தமை மற்றும் வீதியால் சென்ற பெண்கள், யுவதிகள், சிறுவர்களை அச்சுறுத்தியமை தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

# மின்கட்டண திருத்தம் முன்மொழிவை சமர்ப்பித்தது இலங்கை மின்சார சபை

இலங்கை மின்சார சபை மின்கட்டண திருத்தம் தொடர்பிலான முன்மொழிவை இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.

இதன்படி தற்போது நடைமுறை யில் உள்ள மின் கட்டணத்தை அதே முறையில் மாற்றமின்றி பேணுவதற்கு இலங்கை மின்சார சபை முன்மொழிந் துள்ளது.

PUCSL

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆரம்பமே கோட்டை

முன்னைய அரசின் காலத்தில் வழங்கப்பட்ட மதுபான சாலை உரிமம் (பார் பெர்மிட்) பற்றிய விடயம் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த ஆண்டின் பிற்பகுதியில் ஜனாதிபதி தேர்தலும், தொடர்ந்து பொதுத் தேர்தலும் நடைபெற்றன. அதற்கு முன்னர் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து அக்டோபர் ஆறாம் தேதி வரை 361 பார் பெர்மிட்கள் முன்னைய அரசினால் வழங்கப்பட்டுள்ளன.

அவை வழங்கப்பட்ட காலத்திலேயே அரசியல் லஞ்சமாக அந்த பார் பெர்மிட்கள் ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு வலிமையாக எழுந்தது. ஆனால், அது பற்றியெல்லாம் கவலைப்படாமல் முன்னைய ஆட்சிப் பீடம் அந்த பார் பெர்மிட்களை வாரி வழங்குவதில் மும்முரமாக இருந்தது.

வடக்கில் மாத்திரம் 48 பார் பெர்மிட்கள் இந்த ஒன்பது மாத காலத்துக்குள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அரசியல் தரப்புகளின் - குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் - பரிந்துரையில் இவை வழங்கப்பட்டன என்பதும், அவற்றை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெருந்தொகை லஞ்சத்துக்கு விற்று விட்டார்கள் என்பதும் பொதுவான பேச்சு. மக்கள் அதை முழுமையாக - சந்தேகத்துக்கு அப்பால் - நம்பும் அளவுக்கு விடயங்கள் கட்டவிழ்ந்தன என்பதையும் மறுக்க முடியாது.

தாம் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால் அந்த விடயங்களை எல்லாம் அம்பலப்படுத்துவோம் என்று பிரகடனப்படுத்திய தேசிய மக்கள் சக்தி தரப்பு, இப்போது அதிகாரத்தைக் கைப்பற்றிப் பத்து வாரங்கள் கடந்த பின்னரும் அதைச் செய்ய முடியாமல் அல்லாடுகின்றது.

இந்த பார் பெர்மிட்கள் வழங்குவதற்கு பரிந்துரைத்தவர்களின் கடிதங்கள் ஏதோ வகையில் அமுக்கப்பட்டு விட்டன என்பதுதான் இப்போது அடிபடும் பேச்சு. அவற்றைக் கண்டுபிடிப்பதற்கு எந்த விதமான நடவடிக்கையை இந்த அரசு எடுத்து இருக்கின்றது என்பது வெளியாகவில்லை.

வெளிப்படைத் தன்மையில்லாமல் வழங்கப்பட்ட பார் பெர்மிட் விடயங்களை ஊடுருவி விசாரித்து கண்டுபிடித்து உண்மையை அம்பலப்படுத்த இயலாத ஆட்சிப் பீடம் முன்னைய அரசுகளின் ஊழல் நடவடிக்கைகளை கண்டுபிடிக்கும் என்று நம்புவதற்கு இடமில்லை.

இனிமேல் பார் பெர்மிட்டுக்கள் வழங்குவதில் வெளிப்படைத் தன்மையை பேணுமாறு கலால் துறை அதிகாரிகளுக்கும் நிதித்துறை அதிகாரிகளுக்கும் புதிய ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். எனினும் இதுவரை கடந்த 9 மாதங்களில் வழங்கப்பட்ட 361 பார் பெர்மிட்டுகளின் விநியோகத்தின் பின்னணிகளை கண்டுபிடிக்க முடியாமல் இருக்கின்றது என்பது ஆட்சி முறைமையின் பின்னடைவே.

மக்களின் நினைவேந்தல் உரிமையைக் கட்டுப்படுத்துவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஏவும் ஆட்சித் துறை, இங்கு இடம்பெற்ற ஊழல், முறைகேடுகள், லஞ்சம், லாவண்யங்களை அம்பலப்படுத்துவதற்கு கடுமையான சட்டங்களைக் கொண்டு வருவது அவசியமானால் அது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

பார் பெர்மிட் விடயங்களில் நடந்த ஊழல், மோசடிகளை - லஞ்ச விவகாரங்களை - கண்டுபிடிக்கும் விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகளை 'மயிலே, மயிலே இறகு போடு!' என்ற பாணியில் கையாள்வது பயன் தராது என்பதை ஆளும் தரப்புப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த விவகாரத்தில் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாத ஆட்சி பீடத்தினால் கடந்த கால ஊழல், மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் எதனையும் அம்பலப்படுத்த முடியாது என்பதுதான் மீண்டும் மீண்டும் நாம் வலியுறுத்திச் சுட்டிக்காட்டும் அம்சமாகும்.

தன்னுடைய ஆட்சியின் - அரசின் - ஆளுமையை, திறமையை வெளிப்படுத்தி நிரூபிப்பதில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஆரம்பத்திலேயே கோட்டை விடுகின்றார் என்றே தோன்றுகின்றது. முதல் கோணல் முற்றிலும் கோணலாகி விடும்.






# ஆளும் கட்சியின் தலைவரைக் கைது செய்யுமாறு தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் உத்தரவு

தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் தாம் அங்கம் வகிக்கும் ஆளும் கட்சியின் தலைவர் ஹன் டொங்-ஹுனை கைது செய்யும்படி உத்தரவிட்டுள்ளார்.

இது தவிர பிரதான எதிர்க்கட்சி தலைவர் மற்றும் மூன்று எதிர்க்கட்சி உயர்மட்ட தலைவர்களையும் கைது செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவரின் இந்த செயல்பாட்டின் கீழ் அவருக்கு எதிராக செயல்படுபவர்களின் நடவடிக்கைகளை முடக்கத் தீர்மானித்துள்ளதாகப் புலனாய்வு தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

இன்று முழுவதும் அரசியல் கட்சிகள் அவசர கூட்டத்தினை மேற்கொண்டு, நாளை ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானத்தைக் கொண்டு வர திட்டமிட்டிருந்தன.

இந்த நிலையில், ஜனாதிபதி இந்த கைது நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருந்த உத்தேச நம்பிக்கை இல்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதற்கு எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில் உள்ளன.

300 ஆசனங்களைக் கொண்ட தென்கொரிய நாடாளுமன்றத்தில் தற்போது எதிர்க்கட்சிகளுக்குப் பெரும்பான்மை பலம் உள்ளதானால் குறித்த பிரேரணை வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தன.

ஜனாதிபதியின் கட்சியைச் சேர்ந்தவர்களும் அவருக்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாகத் தகவல்கள் கசிந்ததனை அடுத்தே அவர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது

# சிரியாவின் ஹோம்ஸ் நகரிலிருந்து வெளியேறிய ஆயிரக்கணக்கான மக்கள்







பயங்கரவாதிகள் தலைநகர் டமஸ்கசை நோக்கி முன்னேறி விடுவார்கள் என்ற அச்சத்தில் சிரியாவின் மூன்றாவது பெரிய நகரமான ஹோம்ஸில்) இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகள் நேற்று வடக்கே ஹமாவைக் (Hama) கைப்பற்றியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது கடந்த வாரம் அலெப்போவின் கட்டுப்பாட்டை இழந்த ஜனாதிபதி பஷர் அல் அசாத் தலைமையிலான அரசாங்கத்துக்கு ஏற்பட்ட இரண்டாவது பின்னடைவு என ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த வாரம் சிரிய அரசாங்கத்திற்கு எதிராகத் தாக்குதலை ஆரம்பித்த பயங்கரவாதிகள் தற்போது இரண்டு முக்கிய நகரங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இது தவிர, அவர்கள் தெற்கிலும் முன்னேறிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அலெப்போவிலிருந்து (Aleppo) தலைநகர் டமஸ்கஸ் செல்லும் வீதியில் உள்ள ஹோம்ஸ் நகரத்தை நோக்கி அவர்கள் நகர்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சிரிய இராணுவம் பல நாட்கள் சண்டையிட்ட போதிலும், ஹமா நகரத்தின் கட்டுப்பாட்டை இழந்துள்ளது.

இந்த நிலையில், ஹோம்ஸ் நகரைப் பாதுகாக்க முடியுமா என்பது சந்தேகமாக உள்ளதாக பிரித்தானியாவை தளமாகக் கொண்டுள்ள சிரிய கண்காணிப்புக் குழு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

# கூட்டணியில் திருமாவளவனுக்கு நெருக்கடி; த.வெ.கவின் தலைவர் விஜய் ஆவேச பேச்சு

"அம்பேத்கரின் புத்தக வெளியீட்டு விழாவில்கூட கலந்துகொள்ள முடியாத அளவுக்கு கூட்டணி கட்சிகள் சார்ந்து விசிக தலைவர் திருமாவளவனுக்கு எவ்வளவு நெருக்கடி இருக்கும் என்பதை என்னால் யூகிக்க முடிகிறது. அவரின் மனது முழுக்க முழுக்க நம்முடன்தான் இருக்கும்."

– இவ்வாறு புத்தக வெளியீட்டு விழாவில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பேசினார்.

அம்பேத்கர் நினைவு நாளான நேற்று 'எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' புத்தக வெளியீட்டு விழா சென்னையில் உள்ள வர்த்தக மையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பேத்கரின் பேரன் ஆனந்த் டெல்டும்டெ, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், முன்னாள் நீதிபதி கே.சந்துரு, விசிக துணைப் பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்நிகழ்வில் தவெக தலைவர் விஜய் 'எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' புத்தகத்தை வெளியிட்டார்.

தொடர்ந்து மேடையில் பேசிய விஜய், "இன்றைக்கு அம்பேத்கர் உயிரோடு இருந்திருந்தால் இன்றைய இந்தியாவை பார்த்து அவர் என்ன நினைப்பார். ஜனநாயகத்தின் ஆணிவேர் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல். தேர்தல் நியாயமாக நடக்கவில்லை என நான் சொல்லவில்லை. ஆனால், சுதந்திரமாகவும், நியாயமாக தான் தேர்தல் நடக்கிறது என்ற நம்பிக்கையை கொண்டு வரவேண்டும். அதற்கு ஒருமித்த கருத்துடன் தேர்தல் ஆணையர் நியமிக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வலிமையான கோரிக்கை. அம்பேத்கரின் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் திகதியை இந்தியாவின் ஜனநாயக உரிமைகள் தினமாக அறிவிக்க வேண்டும் என்பது என்னுடைய மற்றொரு கோரிக்கை. இதனை நான் மத்திய அரசிடம் முன்வைக்கிறேன்.



இன்றைக்கும் மணிப்பூரில் என்ன நடக்கிறது என்பது நமக்கு தெரியும். அதை கண்டுகொள்ளாமல் ஓர் அரசு மேலிருந்து நம்மை ஆண்டு கொண்டிருக்கிறது. அங்குதான் அப்படி என்றால் இங்கு இருக்கும் அரசு எப்படி இருக்கிறது என்றால், சமூக நீதி பேசும் இங்கிருக்கும் அரசு, வேங்கைவயல் பிரச்சினையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதையெல்லாம் அம்பேத்கர் பார்த்தால் வெட்கப்பட்டு தலைகுனிந்து போவார். பெண்களுக்கு எதிரான குற்றம், பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றம், மனித உயிர்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருகிறது. தமிழக மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பாதுகாப்புடன் முழுமையாக அளிக்கும், மக்களை நேசிக்கும் ஒரு நல்ல அரசுதான் இதற்கான தீர்வு.

இங்கு நடக்கும் பிரச்சினைகளுக்கு சம்பிரதாயத்துக்காக ட்வீட் போடுவதும், சம்பிரதாயத்துக்காக அறிக்கை விடுவதும், மக்களுடன் இருப்பதாக காட்டிக் கொள்வதும், சம்பிரதாயத்துக்காக மழை தண்ணியில் நின்று போட்டோ எடுப்பதிலும் எனக்கு கொஞ்சமும் உடன்பாடில்லை. என்ன செய்வது நாமும் சம்பிரதாயத்துக்கு சில நேரங்களில் அப்படி செய்யவேண்டியுள்ளது. மக்களுடன் உணர்வுபூர்வமாக இருக்க வேண்டும். தமிழகத்தில் என்ன பிரச்சினை நடந்தாலும், அவர்களின் உரிமைகளுக்காவும், அவர்களுடன் உணர்வுபூர்வமாகவும் எப்போதும் இருப்பேன்.

மக்கள் உணர்வுகளை மதிக்க தெரியாத, மக்களுக்கான அடிப்படை சமூக நீதி பாதுகாப்பை உறுதி செய்ய இயலாத, கூட்டணி கணக்குகளை மட்டுமே நம்பி, இறுமாப்புடன் 200 வெல்வோம் என்று எகத்தாள முழக்கமிடும் மக்கள் விரோத ஆட்சியாளர்களுக்கு, என் மக்களுடன் இணைந்து நான் விடுக்கும் எச்சரிக்கை என்னவென்றால், நீங்கள் உங்கள் சுயநலத்துக்காக பல வழிகளில் பாதுகாத்து வரும் உங்களின் கூட்டணி கணக்குகள் அனைத்தையும், 2026-ல் மக்களே மைனஸ் ஆக்கிவிடுவார்கள்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனால் இன்று வர முடியாமல் போனது. அம்பேத்கரின் புத்தக வெளியீட்டு விழாவில் கூட கலந்து கொள்ள முடியாத அளவுக்கு கூட்டணி கட்சிகள் சார்ந்து எவ்வளவு நெருக்கடி இருக்கும் என்பதை என்னால் யூகிக்க முடிந்தாலும், அவரின் மனது முழுக்க முழுக்க நம்முடன் தான் இருக்கும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# விஜய் தெரிவித்துள்ளது போல் தி.மு.க. அழுத்தம் தரவில்லை

## திருமாவளவன் விளக்கம்



"அம்பேத்கர் நூல் வெளியீட்டு விழாவில் நான் பங்கேற்காமல் போனதற்கு தி.மு.க. கொடுத்த அழுத்தம் காரணம் என விஜய் கூறியிருக்கிறார். அதில் எனக்கு உடன்பாடில்லை. அப்படி எந்த அழுத்தமும் எனக்கு தி.மு.க. தரப்பிலிருந்து கொடுக்கப்படவில்லை."

– இவ்வாறு விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

"தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் அம்பேத்கர் நினைவு நாளில், அம்பேத்கரின் நூலை வெளியிட்டிருப்பதும், அவரைப் பற்றி பேசியிருப்பதும் பெருமை அளிக்கிறது. இன்றைக்கு பொது நீரோட்டத்தில் அம்பேத்கர் வெகுவாக பேசப்படுகிறார். அந்த வரிசையில் விஜய்யும் இணைந்திருப்பது வரவேற்புக்குரியது.

அந்த நிகழ்வில் நான் பங்கேற்க இயலாமல் போனதற்கு தி.மு.க. அல்லது தி.மு.க. தலைமையிலான கூட்டணி கட்சிகள் கொடுத்த அழுத்தம் தான் காரணம் என அவர் கூறியிருக்கிறார். அதில் எனக்கு உடன்பாடில்லை. அப்படி எந்த அழுத்தமும் இல்லை என்பதை நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன். அழுத்தம் கொடுத்து அதற்கு இணங்கும் அளவுக்கு நானோ அல்லது விசிகவோ பலவீனமாக இல்லை என்பதை பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த நிகழ்வின் நான் பங்கேற்காமல் போனதற்கு விஜய் காரணமில்லை." – என்றார்.



# விளம்பர நோக்கங்களுக்காக சிறுவர்களை பயன்படுத்த தடை

12 வயதுக்குட்பட்ட சிறுவர்களை வர்த்தக விளம்பர நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்குத் தடை விதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி நேற்று நாடாளுமன்றில் கருத்துரைத்த போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 2025 ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இந்த தடை அமுலுக்கு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தமானியில் வெளியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டாலும் அது நடைமுறைக்கு வரவில்லை.

ஆனால், தற்போது அதனை எந்த சந்தர்ப்பத்திலும் கைவிடுவதற்கு நாம் தயாரில்லை என சுகாதார மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.



# நாட்டின் சில பகுதிகளில் இன்று மழை பெய்யக்கூடும்

நாட்டின் சில பகுதிகளில் இன்று மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேல், சபரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலும் இன்று மாலை அல்லது இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அரசமைப்பு சபைக்கு ௨ உறுப்பினர்கள் நியமனம்

அரசமைப்பு சபைக்கு இரண்டு உறுப்பினர்கள் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி எதிர்க்கட்சி தலைவரைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராக அஜித் பி பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், சிறுபான்மை கட்சிகளின் சார்பில் இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன், அரசமைப்பு சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிறுபான்மை கட்சிகளின் சார்பில் ஒரு உறுப்பினரைத் தெரிவு செய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான் மற்றும் எஸ்.ஸ்ரீதரன் ஆகியோருக்கு இடையே வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

இதில் எஸ்.ஸ்ரீதரனுக்கு 11 வாக்குகளும் ஜீவன் தொண்டமானுக்கு 10 வாக்குகளும் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

10 உறுப்பினர்களைக் கொண்ட அரசலமைப்பு சபையின் தலைவர் பதவி, சபாநாயகருக்கு வழங்கப்படும்.

ஏனைய உறுப்பினர்களாகப் பிரதமர் மற்றும் அவரை பிரதிநிதித்துவப்படுத்தி ஒருவர் தெரிவு செய்யப்படுவார்.

அதேபோன்று ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவரும், எதிர்க்கட்சி தலைவர் மற்றும் அவரை பிரதிநிதித்துவப் படுத்தி ஒருவரும் நியமிக்கப்படுவார்கள்.

அத்துடன், சிறுபான்மை கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் சார்பில் மூன்று உறுப்பினர்கள் அரசியலமைப்பு சபைக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.



# நாடாளுமன்றத்திற்கான ஐ.தே.கவின் தலைவரானார் ஜீவன் தொண்டமான்

நாடாளுமன்றத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு உறுப்பினரான ஜீவன் தொண்டமான் அக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தில் போட்டியிட்டு ஒரு ஆசனத்தைப் பெற்றுக்கொண்டது.

இதில் 46,438 அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரான ஜீவன் தொண்டமான் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருந்தார்.

இந்தநிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றத்திற்கான தலைவராக ஜீவன் தொண்டமான் நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.12.2024


மேஷம்

இன்று சிறப்பான பலன்கள் காணப்படும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம். உங்களிடம் உறுதி காணப்படும்.

பணியிடத்தில் சக பணியாளர்களுடன் நட்பாக பழகுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நெருக்கமாக பழகுவீர்கள். உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள். இருவரும் இன்றைய நாளை மகிழ்வுடன் கொண்டாடுவீர்கள்.

உங்கள் நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். உங்கள் பணப் பெட்டியில் பணம் கணிசமாக உயரும்.

கடவுள் அருளால் இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


ரிஷபம்

இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாள். நீங்கள் உங்கள் இலக்குகளை விரைந்து அடைவீர்கள்.நீங்கள் உங்கள் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள இன்றைய நாளை முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும்.புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்கள் துணையுடன் ஆன்மீக யாத்திரை மேற்கொண்டு மகிழ்வீர்கள். இது கண்டிப்பாக உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நிதி நிலைமையில் ஸ்திரத்தன்மை காணப்படும். நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.


மிதுனம்

இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது.இதனால் உங்கள் தன்னம்பிக்கை பாதிக்கும். ஆன்மீக சொற்பொழிவு கேட்டல், கோவிலுக்கு செல்லுதல் போன்றவற்றின் மூலம் ஆறுதல் பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது.

நீங்கள் உங்கள் துணையிடம் கவனமற்ற வார்த்தைகள் பேசுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். மகிழ்ச்சியுடன் இருக்க பேச்சில் கடுமையை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையுடன் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்ளவும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக பணம் கரையும்.


கடகம்

இன்றைய நாள் நீங்கள் எதிர்பார்த்தபடி இருக்காது. இன்று அதிர்ஷ்டத்தை நம்பி இருக்க இயலாது என்ற காரணத்தினால் சுய முயற்சியை நம்புங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். ஓய்விற்கு நேரம் இருக்காது. சிறப்புடன் பணியாற்ற திட்டமிட்டு பணி புரிய வேண்டும்.

உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க இயலாது. உறவில் குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவு காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று மனதில் அமைதியின்மை காணப்படும். இதனால் பதட்டம் நிலவும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.


சிம்மம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சி காணப்படும் நாள். கடினமான பணிகளையும் இன்று எளிதாக முடிப்பீர்கள். உடல் மற்றும் மன தைரியத்துடன் காணப்படுவீர்கள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை பயன்படுத்துவீர்கள். நீங்கள் பணி செய்யும் பாணி உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே அன்பு பெருகும்.

பண வரவு தேவையை விட அதிகமாக காணப்படும். சேமிப்பு கணிசமாக உயரும்.

பொதுவாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இன்று ஆற்றல் நிறைந்து காணப்படும்


கன்னி

இன்று ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்கும். உங்களிடம் காணப்படும் வலிமை காரணமாக இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். மூத்தவர்களின் ஆதரவு பெறுவீர்கள். அதனால் சிறப்பாக உணர்வீர்கள்.

நீங்கள் சிறந்த முறையில் பணியாற்றுவீர்கள். உங்கள் பணிகளை ஒழுங்கு முறையுடன் மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு காணும் அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. உங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


துலாம்

உங்கள் செயல்களை மேற்கொள்ளும்போது உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். இன்று பதட்டம் காரணமாக பாதிப்பு ஏற்படும்.

உங்கள் சக பணியாளர்கள் வளர்ச்சி பெற்று முன்னணியில் இருப்பார்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று அன்பிற்கு உகந்த நல்ல அல்ல. உங்கள் துணையின் தேவையை புரிந்து கவனம் எடுத்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று பண வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளுக்கான ஆவணம் பராமரிக்க வேண்டும்.

செரிமானப் பிரச்சினைகள் ஏற்படும் என்பதால் உணவில் கவனம் தேவை. ஆரோக்கியத்தில் கவனம் மேற்கொள்ளுங்கள்.


விருச்சிகம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல.இன்று பாதகமான விளைவுகளை தடுக்க யோசித்து முடிவெடுங்கள். இன்று நீங்கள் வீட்டுப் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு கொள்ள இயலாது. மேலும் பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையிடம் வெளிப்படையாக உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வது நல்லது. இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வும், மகிழ்ச்சியும் காணப்படும்.

இன்று பண இழப்பு காணப்படும். அஜாக்கிரதை காரணமாக சிறிது பணத்தை இழப்பீர்கள்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலை உண்டாக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.12.2024




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி காண்பீர்கள். இன்றைய நாளில் நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

இன்று சுமூகமாக பணிகள் நடக்க உகந்த நாள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தை மற்றும் நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று உங்களுக்கு பாராட்டு வகையில் ஊக்கத் தொகை கிடைக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று வலிமையாக உணர்வீர்கள்.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். எந்த செயலையும் தொடங்குமுன் யோசித்து செயல்படவும். இன்று கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். அதனை கவனமுடன் கையாளவும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் எதிர்காலம் குறித்த பயம் காரணமாக பணியிடத்தில் பதட்டம் காணப்படும். நீங்கள் அமைதியாக திறமையுடன் உங்கள் பணிகளை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் மனதில் அமைதியின்மை காணப்படும். இதனால் உணர்வுகளை பகிர்ந்து கொள்வது கடினமாக இருக்கும்.

வீட்டை புதுப்பிக்க அல்லது புனரமைக்க பணச் செலவு நேரலாம். உங்கள் சேமிப்பு நிலை உயர குறைந்த வாய்ப்பே உள்ளது.




இன்று விரும்பும் பலன் கிடைக்க சாத்தியமான நாள் அல்ல. பிறருடன் பேசும்போது கவமாகப் பேச வேண்டும். நண்பர்களை சந்திப்பதை தவிருங்கள். இறைவழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தாமதம் காணப்படும்.பணிகளை குறித்தநேரத்தில் மிச்சமின்றி முடிக்க நீங்கள் திறமையாக பணியாற்ற வேண்டும்.

சிறிய விஷயத்தையும் நீங்கள் தீவிரமாக எடுத்துக் கொள்வதன் காரணமாக உங்கள் துணையுடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டியது அவசியம்.




இன்று சாதகமான விளைவுகள் கிடைக்காது. இதனால் குழப்பமான மனநிலை காணப்படும். உங்கள் கருத்துக்களை தெளிவாக எடுத்துக் கூற இயலாது. பிறருடன் பேசும்போது கவனம் தேவை.

இன்று தேவையற்ற பயணங்கள் காணப்படும். பணியில் உங்கள் வளர்ச்சிக்கான வாய்ப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

பணப்பற்றாக்குறை இன்று உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள். சூழ்நிலையைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park